### (ஆ ஈ) மேலூர் கூட்டுறவு நூற்பாலையை இயங்கச் செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

**திரு. ஆர். சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலே மூடிக்கிடக்கிற கூட்டுறவு நூற்பாலையைத் திறக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இலங்கையிலே இருந்து வந்த இலங்கைத் தமிழர்கள் 1,000 பேர் அதிலே பணிபுரிந்து வந்தார்கள். 1989 ஆம் ஆண்டு அந்த ஆலை மூடப்பட்டது. என்னுடைய வீட்டிற்குப் பக்கத்திலே 100 மீட்டர் தூரத்திலே அந்த ஆலை இருக்கிறது. அது மூடிக் கிடக்கிறது. அந்தக் கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

### (ஆ உ) பட்டுக்கோட்டை தொகுதி, சொக்கனாவூர்-புளியக்குடி அருகே உயர்மட்டப் பாலம் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியத்தைச் சார்ந்த சொக்கனாவூர், புளியக்குடி ஆகிய ஊர்களுக்குச் செல்லக்கூடிய வழியிலே இருக்கக்கூடிய தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக எங்களிடையே இருக்கின்றது. (குறுக்கீடு) பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியத்தைச் சார்ந்த சொக்கனாவூர்- புளியக்குடி கிராமங்களுக்குச் செல்லக்கூடிய, 1960 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அந்தப் பாலம் தரைப் பாலமாகவே இருந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அன்றைய அமைச்சர் மரியாதைக்குரிய மாண்புமிகு ராமையா போன்றவர்கள் எல்லாம் அந்தப் பகுதிக்கு வந்தபோதுகூட நீச்சல் அடித்துதான் அந்தப் பகுதிக்குச் சென்ற சூழ்நிலை உருவானதாகச் சொல்வார்கள். நமது மரியாதைக்குரிய மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கடந்த வெள்ளத்தின்போது மதுக்கூருக்கு வந்தபோது நபார்டு திட்டத்தின்கீழ் அந்தப் பாலத்தை கட்டிக் கொடுப்பதாக உறுதி அளித்திருந்தார்கள். இந்த நிதியாண்டிலே மீண்டும் அந்தப் பாலத்தை*

2009 ஜூலை 21] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

உயர்மட்டப் பாலமாகக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

*மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே ஏற்கெனவே 4, 5 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளப் பகுதியைப் போய் பார்வையிட்ட அந்த நேரத்திலே, அந்தப் பாலமும் பார்வையிடப்பட்டது. நபார்டு வங்கியினுடைய ஒத்துழைப்பு என்று தெரிவிக்கிறார். நானும் அந்தப் பதிலைச் சொன்னதன் காரணமாக அவரும் திரும்ப இதைச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே நபார்டு வங்கியினுடைய ஒப்புதலுக்கு பல பாலப் பணிகள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அவற்றில் இதுவும் இடம் பெறக்கூடிய வகையிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

## (ஆஊ) சேரன்மகாதேவி தொகுதி, பள்ளிச் சுற்றுலாவின்போது உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் அவர்களிடத்திலே இதுவரை நஷ்ட ஈடு கேட்டு, பெறாதவர்களே யாரும் கிடையாது. ஆனால், என்னுடைய தொகுதியிலே கடந்த 1–9–2008–ல் பள்ளிச் சுற்றுலா சென்றபோது இறந்த ஒரு மாணவி காமாட்சி மற்றும் உடன் சென்ற சமையல் உதவியாளர் கணபதியம்மாள் ஆகிய இரண்டு பேருக்கும் நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று நான் 7–10–2008 அன்றே மனு செய்திருந்தேன். ஆனால், இதுவரை உதவி வழங்கப்படவில்லை. கணபதியம்மாளின் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். அவரது தாயார் ஊனமுற்றவர். மிகவும் கஷ்டப்படும் குடும்பம். நான் நேரடியாகப் போய்ப் பார்த்தேன். எனவே, தயவுகூர்ந்து போதிய அளவிற்கு, திருப்தியான அளவிற்கு அந்தக் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்கி உதவுமாறு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தங்கள்முலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.